Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    கார்த்திகை 16    ( 01-12-93 )    புதன்கிழமை    ஓசை 286

## இன்று உலக எயிட்ஸ் தினம்
## உலகசுகாதார நிறுவனம் பிரகடனம்

'எயிட்ஸ்' நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் முதலாம் நாளை உலக எயிட்ஸ் தினமாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியுள்ளது ஏனைய நோய்கள் போலன்றி இந்நோய் ஏற்பட்டால் மாற்றமுடியாத நிலையும், நோய்வராமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்து இல்லாமையும் தற்பொழுது காணப்படுகிறது இதனைத் தடுக்க ஒரே வழி சுகாதாரமான இனவிருத்தி உறவுகளும், ஏனைய தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதுமாகும். உலகரீதியாக தற்சமயம் 1.4கோடி மக்கள் எயிட்ஸ்கிருமியினால் பாதிப்புற்றிருக்கிறார்கள் என்றும் 2000ஆண்டளவில்

(3ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையைதீருங்கள்
# அல்லது பதவி விலகுங்கள்

## இரு பொதுமக்களின் தலை ராணுவத்தால் துண்டிப்பு
### கிரானில் கோரச் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரானில் இரு பொதுமக்களின் தலைகளை சிறிலங்கா இராணுவத்தினர் வெட்டிச் சென்றுள்ளனர். கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் கிரானைச் சேர்ந்த விவசாயிகளான பூபதி வெற்றிவேல் (24), வேலாயுதம் பேரின்பராஜா (24) ஆகியோரின் தலைகளே சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிச் செல்லப்பட்டன.

இதேவேளை கடந்த 25-ம் திகதி காலை பாவற்கொடிச்சேனை கல்லை நகர் சிறிலங்கா இராணுவ முகாமிலுள்ள படையினர் கல்லைநகர் கிராமத்தைச் சுற்றிவளைத்து இரு பொதுமக்களை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி செயற்குழு தீர்மானம்

(கொழும்பு)

**இனப்பிரச்சினையைத் திருங்கள், அல்லது ராஜினாமாச் செய்யுங்கள் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமையில் கடந்த 23 ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நிறைவேற்றியுள்ளது.**

மேலும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்படவேண்டியது அவசியம். அதற்கேற்ப தீர்வு யோசனை ஒன்றை அரசாங்கம் முன்வைத்தால் அதனை பரிசீலனை செய்ய எதிர்க்கட்சிகள் தயாராக இருப்பதாகவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா தலைமையில் நடைபெற்றது.

மத்திய குழு உறுப்பினர் பலரும் இக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட அம்பாந்தோட்டை எம்.பி. மகிந்த ராஜபக்ச, களுத்துறை மாவட்ட எம்.பி. டாக்டர் நெவில் பெர்ணாண்டோ ஆகிய இருவரும் தாங்கள் அநுரா பண்டார நாயக்காவை ஆதரித்தபோதிலும் எக்காரணம் கொண்டும் சுதந்திரக் கட்சியை விட்டு விலகப் போவதில்லை என்று இக் கூட்டத்தில் வைத்து தெரிவித்தனராம்.

அரசாங்கம் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் அல்லது ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிரணிக் கட்சிகள் நாடெங்கும் பொதுக் கூட்டங்களை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் முதலாவது கூட்டம் டிசம்பர் 15ஆம் திகதி கொழும்பு ஹைபார்க் சதுக்கத்தில் மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் நடைபெறும்.

சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச்சென்ற அநுரா பண்டார நாயக்காவின் இடத்திற்கு தொம்பே தொகுதி

## தொண்டாவுடன் உறவைப்பேண
## பிரதமர் ரணில் வலியுறுத்து
### கோரிக்கைகள் குறித்து மந்திரிசபை ஆராயும்

(கொழும்பு)

தேர்தல்களில் தொடர்ந்தும் வெற்றிபெற வேண்டுமாயின் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனான உறவு மிக அவசியம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.தே.க. செயலாளர் சிறிசேனகூரேயும் ...

... விதத்தில் தீர்வுத்திட்டம் ஒன்றை வெளியிடுவது அவசியம் என ரணில் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர் தொடர்பான பிரச்சினை குறித்தும் தொண்டமான் ...

... என தெரியவருகிறது.

இதேவேளை பல அமைச்சர்கள் இ.தொ.காவின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என வலியுறுத்தி வருவதாகவும் எனவே டி.பி விஜேதுங்க என்ன முடிவு எடுப்பார் என்பது ...

## பிரிட்டிஷ் உதவி வந்துசேராமைக்கு
## கப்பல் வசதியினமே காரணம்
### யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு போதிய கப்பல் வசதியின்மையே காரணம் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்

மேற்படி மருத்துவ உபகரணங்களை வாதுவ கப்பலிலேயே ஏற்ற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இக் கப்பலைத் தவிர வேறு கப்பலில் எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்களில் படுக்கைக்கான மெத்தைகள் போன்ற மேலும் சில பொருள்களே எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது இதைவிட யாழ். போதனா வைத்தியசாலைக்கு அத்தியாவசியமான மின் பிறப்பாக்கி ...

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை உடன் எடுக்காவிடில் இவ் உபகரணங்கள் வேறு பகுதிகளுக்கு சிறிலங்கா அரசினால் மாற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றது. (பா)

## வடகிழக்கு ஆளுநராக லயனல் பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான புதிய ஆளுநராக முன்னாள் அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோ நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆளுநராகக் கடமையாற்றிய லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தினா ஓய்வு பெறுவதை முன்னிட்டு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி டி.பி விஜேதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணம், திருக்கோணமலை மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும், சிவில் பாதுகாப்பு அமைச்சின் செய

(3 ஆம் பக்கம் பார்க்க)

அரசின் போக்கு மாறுகிறதா?

## லயனல் பெர்னாண்டோ நியமனம் எழுப்பிய கேள்வி

...மேலும் இனப் பிரச்சினை
...அரசியல் தீர்வுகாணப்பட
வேண்டியது அவசியம். அதற்
...கற்ப தீர்வு யோசனை
...ன்றை அரசாங்கம் முன்
வைத்தால் அதனை பரிசீ
லனை செய்ய எதிர்க்கட்சி
கள் தயாராக இருப்பதாக
...ம் அத்தீர்மானத்தில் குறிப்
...பிடப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்றது.

மத்திய குழு உறுப்பினர் பலரும் இக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர். கூட்... அம்பாந்தோட்டை எம்.பி. மகிந்த ராஜபக்ச, களுத்துறை மாவட்ட எம்.பி. டாக்டர் நெவில் பெர்ணாண்டோ ஆகிய இருவரும் தாங்கள் அநுரா பண்டாரநாயக்காவை ஆதரித்தபோதிலும் எக்காரணம் கொண்டும் விலகப் போவதில்லை என்று இக் கூட்டத்தில் வைத்து தெரிவித்தனராம்.

அரசாங்கம் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் அல்லது ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிரணிக் கட்சிகள் நாடெங்கும் பொதுக் கூட்டங்களை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் முதலாவது கூட்டம் டிசம்பர் 15ஆம் திகதி கொழும்பு ஹைபார்க் சதுக்கத்தில் மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் நடைபெறும்.

சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச்சென்ற அநுரா பண்டார நாயக்காவின் இடத்திற்கு தொம்பே தொகுதி அமைப்பாளரான உபாலி குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

...கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு போதிய கப்பல் வசதியின்மையே காரணம் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி மருத்துவ உபகரணங்களை வாதுவ கப்பலிலேயே ஏற்ற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இக் கப்பலைத் தவிர வேறு கப்பலில் எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்களில் படுக்கைக்கான மெத்தைகள் போன்ற மேலும் சில பொருள்களே எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட யாழ். போதனா வைத்தியசாலைக்கு அத்தியாவசியமான மின் பிறப்பாக்கி போன்ற பெறுமதிமிக்க உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்களில் அடங்கியிருந்த பொழுதிலும் இவை வருடக்கணக்கில் கொழும்பில் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

...உபகரணங்கள் வேறு பகுதி... ...காணப்படுகின்றது. (பா)

# தொண்டாவுடன் உறவைப்பேண பிரதமர் ரணில் வலியுறுத்து

## கோரிக்கைகள் குறித்து மந்திரிசபை ஆராயும்

(கொழும்பு)

தேர்தல்களில் தொடர்ந்தும் வெற்றிபெற வேண்டுமானால் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனான உறவு மிக அவசியம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.தே.க. செயலாளர் சிறிசேன கூரேயும் மற்றும் சில அமைச்சர்களும் டி.பி. விஜேதுங்கவிடம் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இ.தொ.காவின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது அல்லது அதற்குச் சமமான அல்லது இ.தொ.கா. ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் தீர்வுத்திட்டம் ஒன்றை வெளியிடுவது அவசியம் என ரணில் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர் தொடர்பான பிரச்சினை குறித்தும் தொண்டமான் முன்வைத்துள்ளஎட்டுக் கோரிக்கைகள் குறித்தும் இன்று கூடவுள்ள மந்திரிசபை உறுதியான தீர்மானம் எடுக்கும் என தெரியவருகிறது.

இதேவேளை பல அமைச்சர்கள் இ.தொ.காவின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என வலியுறுத்தி வருவதாகவும் எனவே டி.பி விஜேதுங்க என்ன முடிவு எடுப்பார் என்பது குறித்து இப்பொழுது கூறமுடியாது எனவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

# வடகிழக்கு ஆளுநராக லயனல் பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான புதிய ஆளுநராக முன்னாள் அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோ நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆளுநராகக் கடமையாற்றிய லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தினா ஓய்வு பெறுவதை முன்னிட்டு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி டி.பி விஜேதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணம், திருக்கோணமலை மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும், சிவில் பாதுகாப்பு அமைச்சின் செய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் போக்கு மாறுகிறதா?

# லயனல் பெர்னாண்டோ நியமனம் எழுப்பிய கேள்வி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே என தெரிவித்துவந்த அரசாங்கம் அப்பகுதி ஆளுனராக லயனல் பெர்னாண்டோவை நியமித்தமை அரசியல் தீர்வொன்றை நாடுவதற்கான ஆயத்த நடவடிக்கையாக இருக்கும் என தான் எதிர்பார்ப்பதாக பி.பி.ஸி. செய்தியாளர் எல். மோ. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முன்னர் யாழ். அரசாங்க அதிபராக இருந்து மக்களின் நல்ல அபிப்பிராயத்தைப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# உலங்கு வானூர்தி தாக்குதலுக்கு மீனவ இளைஞர் பலியானார்

(குருநகர்)

கடந்த ஞாயிறு நள்ளிரவு பூநகரி - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா வான்படையும்-கடற்படையும் நடத்திய தாக்குதல் காரணமாக வலை, வள்ளங்களை விட்டுவந்த மீனவர்கள் நேற்று முன்தினம் அவற்றை மீட்டுவரச் சென்ற இடத்தில் உலங்கு வானூர்தி சுட்டு இளம் மீனவர் ஒருவர் பலியானார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் உலங்கு வானூர்தி சுட்டதில் குருநகர் தண்ணீர்த்தாங்கி முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த தேவதாஸ் ஜேம்ஸ் பொன்ட் (பார்த்திபன் வயது 25) என்னும் இளம் மீனவரே பலியானவராவார். (21)

## கறுப்பு உடையணிந்தவர்கள் எம்மைநோக்கி ஓடிவந்தனர்

(குருநகர்)

நானும் பார்த்தீபனும் பூநகரி - கல்முனைக் கரையில் வள்ளத்தை கண்டு எடுத்துக்கொண்டு வெளிக்கிடும்போது கரையில் கறுப்பு உடையணிந்த நாலைந்து பேர் எம்மை நோக்கி ஓடிவருவதைக் கண்டோம். உடனடியாக பாயை இழுத்து வள்ளத்தை ஓடவிட்டோம்.

சிறிது நேரத்தில் ஒருகரை-காஞ்சகாட்டுப் பகுதியில் இருந்து உலங்கு வானூர்தி எழுந்து எம்மை நோக்கி வருவதைப் பார்த்து வள்ளத்தைக் கரையை நோக்கிச் செலுத்தினோம்.

கரையில் இறங்கி தாழம் பற்றைக்குள நுழையும்சமயம் 'ஐயோ' என்றகுரல்கேட்டது

(3ஆம் பக்கம் பார்க்க)

## ...ரச்சாவு



வீரவேங்கை தவமாலன்

மட்டக்களப்பு மாவட்டம் காலபோட்ட மடுவில் மாவீரர் தின நிகழ்ச்சிகளை நடாத்தி முடித்துவிட்டு 27-ம்திகதி அதிகாலை 2.45மணியளவில் திரும்பிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்துதாக்கியதில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை - தவமாலன் (கிருஷ்ணபிள்ளை சிவராசா, குருக்கள் மடம், செட்டிப்பாளையம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# பஸ்வண்டி மீது ஹெலித்தாக்கு நீர்வேலியில் 8 பேர் படுகாயம்

(மது நிருபர்)

நீர்வேலிப் பகுதியில் வைத்து பயணிகள் மினிபஸ் மீது சிறிலங்கா உலங்குவானூர்தி நடாத்திய அகோரத் தாக்குதலில் எட்டுப் பயணிகள் படுகாயமடைந்ததுடன் பஸ்சும் பலத்த சேதமடைந்தது

நேற்று மாலை 6 மணியளவில் வடமராட்சி பகுதியிலிருந்து யாழ். நகர் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்றின் மீது நீர்வேலி பகுதியில் வைத்து உலங்குவானூர்தி கண்மூடித்தனமான கலிபர் தாக்குதல்களையும், றொக்கற் தாக்குதல்களையும் நடாத்தியது.

உலங்குவானூர்தி நடத்திய இத்தாக்குதலினால் பஸ்ஸில் பயணம் செய்த கந்தப்போடி தெய்வானை (வயது 45), சாமித்தம்பி தெய்வானை (வயது 48, அழகேஸ் புனிதவதி (வயது20) சரவணமுத்து புவனநந்தினி (வயது 11), தங்கத்துரை அழகேஸ்வரி (வயது 40), வல்லிபுரம் ஜெயராஜா (வயது 24) சுதுமலை. பிள்ளைநாயகம் லீலா (வயது 35), தம்பிமுத்து மணிராசா (வயது 45) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த பயணிகள் வாகனம் மீது சிறிலங்கா விமானப் படையின் உலங்குவானூர்தியில் இருந்து நடாத்தப்பட்ட தாக்குதலினால் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்

( 3ஆம் பக்கம் பார்க்க )

# பாடசாலை விட்டதும் ஓடும் மாணவர் போல் புலிகள் 'திமு திமு' என முகாமிற்குள் புகுந்தனர்

(கொழும்பு)

பாடசாலை விட்டுச் செல்லும் பிள்ளைகள் பாடசாலை வாசலில் எப்படி திமு திமு என ஓடுவார்களோ அப்படித்தான் விடுதலைப் புலிகள் பூநகரி தாக்குதலின் போது எம்மை நோக்கி ஓடி வந்தார்கள் எம்மால் எதுவுமே செய்யமுடியவில்லை.

இவ்வாறு பூநகரி தாக்குதலின்போது உயிர்தப்பிய நாவலப்பிட்டியைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தாக்குதல் நடந்த தினம் இரவு 1-15 மணியளவில் நானும் வேறு ஐந்து சிப்பாய்களும் கடற்கரையோரம் நின்றிருந்தோம். அப்போது நாம் உணவு வகைகளையும், வேறு பொருள்களையும் இராணுவத்தினருக்கு அனுப்பும் கடமையில் ஈடுபட்டிருந்தோம். அப் பணியை முடித்துக்கொண்டு திரும்பியதுதான் தாமதம் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன. என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

கல்முனைத் திசையிலிருந்தும், பூநகரித் திசையிலிருந்தும் புலிகள் முகாமுக்குள் திடுதிப்பென நுழைந்தார்கள்.

அப்போது அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும், குண்டுகளை வீசிக்கொண்டும், மோட்டார்களால் தாக்கிக்கொண்டும் வந்தார்கள் மிக மோசமாகத் தாக்கினார்கள். சந்து பொந்துகளுக்குள்ளும் குண்டுகள் எறிந்தார்கள.

புலிகளில்பலர் சூடுபட்டுவீழ்ந்த போதும் அவர்களையும் தாண்டிக்கொண்டு வேகமாக அவர்கள்முகாமிற்குள் புகுந்துகொண்டனர்

எமது முகாமுக்குள் புகுந்த புலிகள் சிவப்புநிற சமிக்ஞை செய்தார்கள். அவர்கள கோல சீருடையும், இராணுவ உடையும் அணிந்திருந்தார்கள்

சிறிது நேரத்தில் எமது சிப்

(3ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### மாமைட் போத்தல்கள் தேவை

பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய சகல அளவிலுமான வெற்றுமாமைட்(MARMITE) போத்தல்கள் எம்மால் கொள்வனவுசெய்யப்படுகின்றது ரேஸ்ட்லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8004)

### தேவை

அநுபவம் மிக்கவர், வேலை பயிலுநர், நிர்வாகப் பகுதி /வரவேற்பு, காசாளர்/கணக்காளர், சமையல் பகுதி, பரிமாறும் பகுதி. தொடர்பு கலைக்னி நிர்வாகம், இல 166 1-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (6742)

### விளக்கு வெளிவந்தது

விளக்கு நவம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் உடனடித் தேவை பற்றிய ஆசிரிய தலையங்கத்துடன் கல்விப் புனரமைப்பு, மௌனம் கலைகிறது, பாடசாலை - ஒரு சமூக நிறுவனம், கணித பாடம், கற்றுச் சுவைப்போம், நினைவில் நிலைக்கும் நிகழ்ச்சி, தேவை - சிறுகதை, நீங்களும் நாங்களும் போன்ற அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

### பொலிஸ்மா அதிபர் பதவி ஏற்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ் மா அதிபராக பிராங் டி சில்வா நேற்று முன்தினம் பதவி ஏற்றார். இவர் சிறிலங்காவின் 24ஆவது பொலிஸ் மா அதிபராவார். நேற்றுக் காலை பொலிஸ் தலைமையகத்தில் அவருக்கு அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. மகாசங்கத்தினர் பிரித் ஓதினர்.

### சிரித்திரன் வெளிவந்துள்ளது

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான சிரித்திரன் இதழ் வெளிவந்துள்ளது. 24 பக்கங்களைக் கொண்ட இவ் இதழில் முன்முறுவல், நிலைக்கண்ணாடி, மகுடி பதில்கள், ஆலாத்தி, சிமைச்சிரிப்பு, நடுநகை, சிரித்திரன் அகராதி, பின்சிரிப்பு உட்பட்ட பல்வேறு அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

## தேவை

விஞ்ஞான ஆய்வு கூடத்தில் உதவியாளர்களாக பணி புரிவதற்கு தகுதியானவர்கள் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

**விள. இல. 207**
**மே / பா. ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-8027)

## சிறுவர் பாடசாலை ஆசிரியர்பயிற்சி நிலையம் மூளாய்.

மேற்படி பயிற்சி நிலையத்தினால் 1994-ம் ஆண்டு தைமாதம் முதற்கிழமையில் டிப்புளோமா பரீட்சை நடைபெற உள்ளது. இப் பரீட்சை எடுக்க விரும்புவோர் அந்தந்த நிலையங்களில் உங்கள் பெயர்களை 10-ம் திகதி டிசெம்பர் 1993க்கு முன் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், மூளாய்.
2. சிறுவர்பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணைநிலையம், 50, மகாத்மா வீதி, நெல்லியடி.
3. சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணைநிலையம், 92, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, ஆகிய இடங்களிலும் பயிற்சி எடுக்க விரும்புவோர் டிசெம்பர் 5ஆம் திகதிக்கு (5-12-1993) முன் பெயர்களைப் பதிவு செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்நிலையத்தில் பயிற்சிபெற்று பாடசாலை நடாத்துவோர் தமது பெயர்களைப் பதிவுசெய்து மேலதிக பயிற்சி எடுப்பதற்கு தயாராகவும்.

(6734) -இயக்குநர்

## G. A Q. 94/95

(பேராதனைப் பல்கலைக் கழகம்)

- AIL-ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இதற்கான பல்கலைக் கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- இதற்கான விரிவுரைகள்

**ஆரம்பம்: 04. 12. 93 (9 மணி)**

விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு:


**S. அருள்நங்கை**

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி - யாழ்.**

(சி.8029)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**02- 12- 1993**



மலர்வு
13-09-1931

உதிர்வு
02-11-1993

### இராமநாதன் பாலசுந்தரம் (துரை)

(இளைப்பாறிய அரச அலுவலர், இறுதியாக உதவி அரச அதிபர் பணிமனை, பருத்தித்துறை)

இன்பருட்டி

காலஞ்சென்ற இராமநாதன் தையல்நாயகி அம்மா தம்பதிகளின் (மலேசியன் பென்சனியர்) சிரேஷ்ட புத்திரன் பாலசுந்தரம் 2-11-93இல் காலமாகிவிட்டார். இவர்சிவகாமி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் பெறாமகனும், காலஞ்சென்ற அப்பாத்துரை, கண்மணி தம்பதிகளின் மருமகனும், பாலரத்தினம் (வல்வெட்டித்துறை) பாலசிங்கம் (இந்தியா), பாலச்சந்திரன் (பருத்தித்துறை), பாலகிருஸ்ணன் (தாதிகள் மேற்பார்வை உத்தியோகத்தர் மந்திகை அரசினர் வைத்தியசாலை), பாலசுப்பிரமணியம் (இலங்கை மின்சாரசபை, வவுனியா), தங்கமணி (இந்தியா), காலஞ்சென்ற ஜெயநாயகி (வல்வெட்டித்துறை), ஜெயலட்சுமி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரகுமார், வசந்தி, உதயகுமார் (சுவிஸ்), ஜெயக்குமார் (சுவிஸ்), பிரேம்குமார் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் காலஞ்சென்ற ஜெயதாஸ், மீனாதேவி, அகிலா, ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமானாரும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை (சிறிரங்கம், முன்னாள் நகரபிதா, வல்வெட்டித்துறை) காலஞ்சென்ற கந்தசாமி (வல்வெட்டித்துறை), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (மட்டக்களப்பு), ருக்மணி (இந்தியா), மகேஸ் (பருத்தித்துறை) அருந்ததி (ஓய்வுபெற்ற மருத்துவதாதி, மந்திகை அரசினர் வைத்தியசாலை), காளியம்மா (வவுனியா), பழனிவேல்சாமி (இலிகிதர், கட்டைவேலி பிரதேசசபை) அருளானந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், அமுதன், காயத்திரி, நிஷாந்தினி, விஜய் ஆனந், துசியந்தினி, கோபிஆனந், சதீஸ்குமார், சுதர்சன், துஷ்யந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வு 02-12-1993இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

''வஸந்தவாசா''
இன்பருட்டி,
பருத்தித்துறை. (6737)

குடும்பத்தினர்.

புங்குடுதீவு — நயினாதீவு பல நோ. கூ. சங்கம் (வ. து.)

## முதலாவது கிளைக்குழுக் கூட்டம் மீண்டும் கூட்டுதற்கு

14-11-1993-ம் திகதி கிளை இலக்கம் 14, 15, 16, 19, 20 ஆகியவற்றிற்கு நடைபெற்ற முதலாவது கிளைக்குழுக் கூட்டம் யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் நடைபெற்றுள்ளதால் அக்கூட்டம் செல்லுபடி யற்றதாக கருதப்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி கூட்டம் மீண்டும் 07-12-1993-ம் திகதி செவ்வாய்க்கிழமை 201/13-ம்குறுக்குத்தெருவில்அமைந்துள்ள சங்கத்தலைமைக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. ப. கனகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட கிளைகளுக்கான உறுப்பினர்கள் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

விபரம்:

07-12-1993-ம் திகதி செவ்வாய்க்கிழமை;-

14-ம் கிளை மு. பகல் 9-00 மணிக்கு
15-ம் கிளை மு பகல் 10-30 மணிக்கு
16-ம் கிளை மு. பகல் 11-30 மணிக்கு
19-ம் கிளை பி. பகல் 2-00 மணிக்கு
20-ம் கிளை பி. பகல் 3-30 மணிக்கு

செயலாளர்
புங் நயி. பல நோ. கூ. சங்கம்.
(சி-8025)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-12-01

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா, ஓமந்தை, பேருந்து நிலையத்தில் வைத்து சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போன 3 தமிழர்கள்.

உமையாள்புரம் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சைவாலய பிரதம குருவான தமிழர்.

1985ஆம் ஆண்டு மட்டு. அரசடிச்சந்திப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விஜயன்** (கணபதிப்பிள்ளை சற்குணானந்தம்- மாமங்கம்- மட்டு)

1986ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதி பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஜெயம்/சதீஸ்** (செல்லத்தம்பி மோகனச்சந்திரன்- ஆரையம்பதி - 03 - மட்டு)

1987ஆம் ஆண்டு மட்டு - தியாவெட்டவான் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ராஜ்** (பரமக்குட்டி அருளம்பலம்- வந்தாறுமூலை - மட்டு)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஜெய்சங்கர், ஜெய்ச்சா** (தம்பு ஜெயக்குமார்- கோப்பாய் வடக்கு - யாழ்)

**ஜோன்சன்** ( - - - )

ராக பிராங் டி. சில்வா நேற்று முன்தினம் பதவி ஏற்றார். இவர் சிறிலங்காவின் 24ஆவது பொலிஸ் மா அதிபராவார். நேற்றுக் காலை பொலிஸ் தலைமையகத்தில் அவருக்கு அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது: மகாசங்கத்தினர் பிரித் ஓதினர்.

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான சிரித்திரன் இதழ் வெளிவந்துள்ளது. 24 பக்கங்களைக் கொண்ட இவ் இதழில் முன்முறுவல், நிலைக்கண்ணாடி, மகுடி பதில்கள், ஆலாத்தி, சிமைச்சிரிப்பு, நடுநகை, சிரித்திரன் அகராதி, பின்சிரிப்பு உட்படப் பல்வேறு அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.


(பேராதனைப் பல்கலைக் கழகம்)

- AIL-ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இதற்கான பல்கலைக் கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- இதற்கான விரிவுரைகள்

**ஆரம்பம்: 04. 12. 93 (9 மணி)**

விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு:
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.

(சி-8029)


ஜெயக்குமார் (சுவிஸ்), பிரேம்குமார் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் காலஞ்சென்ற ஜெயதாஸ், மீனாதேவி, அகிலா, ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை (சிறிரங்கம், முன்னாள் நகரபிதா, வல்வெட்டித்துறை) காலஞ்சென்ற கந்தசாமி (வல்வெட்டித்துறை), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (மட்டக்களப்பு), ருக்மணி (இந்தியா), மகேஸ் (பருத்தித்துறை) அருந்ததி (ஓய்வுபெற்ற மருத்துவதாதி, மந்திகை அரசினர் வைத்தியசாலை), காளியம்மா (வவுனியா), பழனிவேல்சாமி (இலிகிதர், கட்டைவேலி பிரதேசசபை) அருளானந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், அமுதன், காயத்திரி, நிஷாந்தினி, விஜய் ஆனந், துசியந்தினி, கோபிஆனந், சதீஸ்குமார், சுதர்சன், துஷ்யந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வு **02-12-1993**இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

''வஸந்தவாசா''
இன்பருட்டி,
பருத்தித்துறை. (6737) குடும்பத்தினர்.

| 5-ம் மாத நினைவஞ்சலி | 5-ம் வருட நினைவஞ்சலி | 4-ம் வருட நினைவஞ்சலி |
|---|---|---|
| **தாய்** | **மகன்** | **மகள்** |



**திருமதி சின்னத்துரைநாகம்மா**

மலர்வு: 15-08-33
உதிர்வு: 26-07-93

அம்மாவே!
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் திருவுருவாய் - வாழ்க்கையில் கலங்கரை விளக்காய் வழிகாட்டிய அம்மாவே உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்



**திரு. சின்னத்துரைகுணரத்தினம்**

மலர்வு: 27-01-56
உதிர்வு: 01-12-88

திதி 06-01-94

குணக்குன்றே!
ஐந்தாண்டுகள் சென்றாலென்ன ஐயாயிரம் ஆண்டுகள் சென்றாலென்ன உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்களை விட்டகலா.



**செல்வி சின்னத்துரை சித்திரவதனி**

மலர்வு: 23-11-66
உதிர்வு: 22-12-89

திதி 23-01-94

இளைய கண்மணியே சித்திரா!
அம்மாவோடும், அண்ணாவோடும் அமைதியாய் சாந்தியடைகிறாயோ!

''விஸ்ணு மகால்'' கண்டி றோட், பளை
(6741) சின்னத்துரை குடும்பத்தினர்

ரால் சுட்டுக் கொல்லப்பட்ட சைவாலய பிரதம குருவான தமிழர்.

1985ஆம் ஆண்டு மட்டு. அரசடிச்சந்திப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**விஜயன்** (கணபதிப்பிள்ளை சற்குணானந்தம்- மாமங்கம்- மட்டு)

1986ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதி பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஜெயம்/சதீஸ்** (செல்லத்தம்பி மோகனச்சந்திரன்- ஆரையம்பதி - 03 - மட்டு)

1987ஆம் ஆண்டு மட்டு - தியாவெட்டவான் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ராஜ்** (பரமக்குட்டி அருளம்பலம்- வந்தாறுமூலை - மட்டு)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஜெய்சங்கர்/ஜெய்ச்சா** (தம்பு ஜெயக்குமார்- கோப்பாய் வடக்கு - யாழ்)

**ஜோன்சன்** (- - -)

யாழ் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அகதி முகாம் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ் - கரவெட்டிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**தீசன்/ஜெகதீசன்** (மரியாம்பிள்ளை அன்ரனி நிக்சன் - கதிரி, நெல்லியடி - யாழ்)

**சுந்தூர்** (சின்னத்தம்பி சுந்தரராஜன் - மத்தொனி, கரவெட்டி - யாழ்)

காரைநகரில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வலந்தலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1989ஆம் ஆண்டு திருமலை, தம்பலகமம், குரங்கல் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். திவாகர்** (சுப்பையா ஜீவராஜ் - நொச்சிகுளம் - திருமலை)

**மங்களதாஸ்** (— — முல்லைத்தீவு)

**குணம்** (ரவிச்சந்திரராஜ் - மன்னார்)

புத்தூரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான புத்தெழில் இலக்கிய சஞ்சிகை ஆசிரியரான-

**திருஞானம்** (புத்தூர்)

1990ஆம் ஆண்டு மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது தப்பியோடிய சிறிலங்கா சிப்பாயுடன் நிராயுதபாணியாக மோதிய போது அச்சிப்பாய் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வைத்தியசாலையில் எமைப் பிரிந்த நாட்டுப்பற்றாளரான, மாமனிதர் வன்னிக் கிழவர்.

**பொ. அருணாசலம்** (— பாலமோட்டை - வவுனியா)

அளவெட்டி, சிராவத்தை வைரவர் கோயிலடியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்.

1992ஆம் ஆண்டு மட்டு - மகிழவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மதிமுகன்/நவாஸ்** (இளையதம்பி அரியநாயகம் - பெரியபுல்லுமலை - மட்டு)

**மேஜர் அபயன்** (கிருஷ்ணமூர்த்தி சிவகுமார்- தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8028)

## சிந்தனைக்கு

நெருப்புடன் பழகுவது
சுட்டு விடும் அளவுக்கு
கிட்ட நெருங்கவும் கூடாது.
குளிரில் வாடும் அளவுக்கு
தூர ஒதுங்கவும் கூடாது.

டயோனிஜினிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 01-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 026 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## ஐ. தே. க. – இ.தொ.கா. உறவு நீடிக்குமா?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உறவில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது. 1977ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருந்து வரும் உறவை முறித்துக் கொள்ள வேண்டிவரும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எச்சரிக்கும் வரையில் பிரச்சினை சென்றுள்ளது. பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள அரசிற்கு ஒரு மாத கால அவகாசம் கொடுத்துள்ள இ. தொ. கா. அதன் முடிவில் உறவை முறித்துக் கொண்டாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஏனெனில், தற்பொழுது இ. தொ. கா. விற்கும், அதன் தலைவர் தொண்டமானுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினை வாழ்வா சாவா என்பதாகும். அதாவது, தோட்டங்களை முப்பது வருடக் குத்தகைக்குக் கோரும் தனியார் கொம்பனிகள் அதற்கு முன் வைக்கும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதை இ. தொ. கா. பார்த்துக் கொண்டிருப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்

எண்பதுகளின் இறுதியில் தோட்டங்கள் தனியார் கொம்பனிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டபோது, ஐந்து வருட காலத்திற்கென வழங்கப்பட்டன. அது உண்மையில், தனியார் கொம்பனிகளைப் பொறுத்து ஒரு பரிசோதனைக் காலம் என்றே கொள்ளவேண்டும். தற்பொழுது ஐந்து வருடங்கள் முடிவுறும் நிலையில், புதிய நிபந்தனைகளுடன், கொம்பனிகள் மீண்டும் குத்தகைக்குக் கேட்கின்றன.

ஆரம்பத்தில், தோட்டங்கள் தனியார் கொம்பனிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டபோது, இ. தொ. கா. தவிர்ந்த பல தொழிற் சங்கங்கள் இதனை எதிர்த்தன. காலனித்துவ காலத்திற்கு திரும்பிச் செல்வதாகவும் குற்றம் சாட்டின. ஆனால், அன்று ஐ.தே.க. அரசாங்கத்துடன், குறிப்பாக அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் இருந்த நெருக்கமான உறவால் இ. தொ. கா. கண்ணை மூடிக்கொண்டிருந்து விட்டது.

ஆனால், இன்று ...

# கோபாலசாமி ஆதரவாளர்கள் நெல்லையில் ஆர்ப்பாட்டம்

## கருணாநிதி படம் உடைக்கப்பட்டது

(சென்னை)

நெல்லையில் வை.கோபாலசாமியின் ஆதரவாளர்கள் தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு எதிராக கண்டன ஊர்வலம் நடத்தினார்கள்.

ஊர்வலத்தின் முடிவில் நெல்லை அண்ணாசிலை முன்பாக கொடிக்கம்பத்தில் ஏற்கனவே இருந்த தி. மு. க கொடியை இறக்கிவிட்டு, புதிய தி. மு. க. கொடியை ஏற்றினார்கள்.

தி. மு. கவை விட்டு வை. கோபாலசாமி நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இக் கண்டன ஊர்வலம் நடாத்தப்பட்டது.

ஊர்வலத்தின் முடிவில் மு. கருணாநிதியின் படத்தை அண்ணாசிலைக்கு முன் போட்டு உடைத்து, கிழித்து எறிந்தனர்

''தி. மு. கவை காட்டிக் கொடுத்த கருணாநிதி ஒழிக'' 'பொதுக் குழுவைக் கூட்ட மறுத்த கருணாநிதி ஒழிக' என்று கோஷங்கள் இடம் பெற்றன.

இந்த ஊர்வலத்தில் அன்பழகனின் படத்தை, வை. கோபாலசாமியின் தொண்டர்கள் எரித்துள்ளனர்.

# விஷமத்தனமான விமானத் தாக்குதல் செயலக நலன்புரிச்சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம்மீது சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு தாக்குதல் நடாத்தியதைக் கண்டித்தும் கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் மக்கள் கூடுமிடங்கள், குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப் படையினரின் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதலைக் கண்டித்தும் யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தினர் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இக் கடிதத்தில் ''தங்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் சிறிலங்கா ஆயுதப் படையினர் அநியாயமாக அர்த்தமற்ற தாக்குதல்களைச் செய்யும்போதெல்லாம் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டனப் பேரணி நடாத்தி எமக்கு ஊடாகவே தமது கண்டன அறிக்கைகளைத் தங்களுக்கு அனுப்பிவந்தனர். தற்போது நாங்களே அந்நிலைக்கு ஆளாகியுள்ளோம்.''

''கடந்த 12ஆம் திகதி அரச செயலகம்மீது நடைபெற்ற தாக்குதலில் அரச அதிபர் உட்பட பல செயலக உத்தியோகத்தர்களும் பொது மக்களும் காயப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்'' என குறிப்பிட்டுள்ளது.

மேலும் யாகப்பர் ஆலயம், ஆஸ்பத்திரிகள் மீதான தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா விமானப்படை தொடர்ந்து தாக்குதல்

சிறிலங்கா விமானப்படை 'புக்காரா'' விமானங்கள் இரண்டு நேற்றுக் காலை 10-15 மணியளவில் பளை புதுக்காட்டுச் சந்தி, தர்மக்கேணி, கிளாலி பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இவ்விமானம் முதலில் பளை பகுதியிலும் பின்னர் பிரதான வீதியிலும் ''றொக்கற்'' தாக்குதல்களை நடாத்தியது. சுமார் 30 நிமிடநேரம் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதேவேளை கடந்த ஞாயிறு நள்ளிரவு 12 மணியளவில் தொண்டமனாறு பகுதிகளிலும் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியுள்ளது

(யோ) (86)

## படையினர் ஒத்திகை

கடந்த சில தினங்களாக தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டுள்ள பிரதேசங்களில் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணமுள்ளன. இப்பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் பயிற்சி பெறும் முகமாகவே இவ் வெடிச்சத்தங்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம் பெறுவதாக தெரியவருகிறது.

குறிப்பிட்ட வேளைகளில் தெல்லிப்பழை - அளவெட்டி, தெல்லிப்பழை - கட்டுவன் வீதிப் பகுதிகளில் விரையும் இராணுவ வாகனங்களின் இரைச்சல், துர்க்காபுரம் பகுதிவரைகேட்கிறது. பலாலி விமானத்தளத்தை அண்டிய பகுதிகளில், விமானப்படையினரும் பயிற்சியில்ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. (09) (11)

# புறக்கோட்டைப் பகுதியில் 12 இளம் பெண்கள் கைது

(கொழும்பு)

பன்னிரண்டு தமிழ் இளம் பெண்கள் புறக்கோட்டையில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். சமீபத்தில் புறக்கோட்டை பொலிஸாரினால் இக் கைது இடம்பெற்றது. கல்முனையிலிருந்து வந்த இரு முஸ்லிம் பெண்களும் கைதானவர்களில் அடங்குவார்கள்.

பொல்அத்துக் கொலான என்ற இடத்தில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்களை ஊறுமன்கந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர். ராஜரத்தினம் (22), ராஜபத்மன் (35), பத்மநாதன் (37) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலையிலிருந்து வவுனியாவிற்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் கடுகஸ்தி கிலியாவில் வைத்து இரு தமிழ்ப் பெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்-

தனியார் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் வேறு இரு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். இந்த இளைஞர்களிடம் நான்கு பீப்பா தேன் கண்டு பிடிக்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம் குருநாகல் பஸ் நிலையத்தில் நின்ற பதின்நான்கு தமிழ் வாலிபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தாங்கள் மன்னாரைச் சேர்ந்த மீனவர்கள் என்று இந்த இளைஞர்கள் தெரிவித்துள்ள போதிலும். இந்த இளைஞர்கள் அனைவரும் மட்டக்களபைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பாடசாலை

யாய்கள் பலர் செத்து விழுந்து கொண்டிருந்தார்கள். எமக்கு என்னசெய்வதுஎன்று புரியவில்லை

உடனே கடற்கரைப் பக்க ...

## புதிய வகுப்புகள் ஜனவரி 5இல்

1994ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் யாவும் 94ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படக் கூடாது என்பதை யாழ். மாவட்ட தனியார் கல்வி நிர்வாகப் பிரிவுச் செயலம் அறிவித்துள்ளது. மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## இன்று

# கிழக்கு இராணுவ முகாம்களை உசார் நிலையில் இருக்க உத்தரவு

(கொழும்பு)

கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. புலிகள் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவு எச்சரித்ததையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து கிழக்கிலுள்ள படைமுகாம்கள் 24 மணிநேரமும் உசார் நிலையில் இருக்குமாறும் குறிப்பாக எல்லைக் கிராமங்களில் உள்ள முகாம்கள் பூரண பாதுகாப்புடன் இருக்குமாறும் பாதுகாப்பு அமைச்சு கிழக்கு பிராந்திய இராணுவ தளபதிக்கு அறிவுறுத்தியுள்ளது.

# ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை உண்டு

## மொலாயன் சிங் யாதவ்

(டில்லி)

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சிக் கூட்டணிக்கு சுயேட்சை உறுப்பினர்களும் தமது கூட்டணியுடன் ஒத்த போக்குடைய கட்சிகளும் ஆதரவளிக்கும் என்று ...

# மாகாணசபை வேட்பாளராக வேண்டவே வேண்டாம்!

## கிழக்கு பிரமுகர்கள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ...

பிரச்சினை வாழ்வா சாவா என்பதாகும். அதாவது, தோட்டங்களை மூப்பது வருடக் குத்தகைக்குக் கோரும் தனியார் கொம்பனிகள் அதற்கு முன் வைக்கும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதை இ. தொ. கா. பார்த்துக் கொண்டிருப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்

எண்பதுகளின் இறுதியில் தோட்டங்கள் தனியார் கொம்பனிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டபோது, ஐந்து வருட காலத்திற்கென வழங்கப்பட்டன. அது உண்மையில், தனியார் கொம்பனிகளைப் பொறுத்து ஒரு பரிசோதனைக் காலம் என்றே கொள்ளவேண்டும். தற்பொழுது ஐந்து வருடங்கள் முடிவுறும் நிலையில், புதிய நிபந்தனைகளுடன் கொம்பனிகள் மீண்டும் குத்தகைக்குக் கேட்கின்றன.

ஆரம்பத்தில், தோட்டங்கள் தனியார் கொம்பனிகளிடம் குத்தகைக்கு விடப்பட்டபோது, இ. தொ. கா. தவிர்ந்த பல தொழிற் சங்கங்கள் இதனை எதிர்த்தன. காலனித்துவ காலத்திற்கு திரும்பிச் செல்வதாகவும் குற்றம் சாட்டின. ஆனால், அன்று ஐ.தே.க. அரசாங்கத்துடன், குறிப்பாக அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் இருந்த நெருக்கமான உறவால் இ. தொ. கா. கண்ணை மூடிக்கொண்டிருந்து விட்டது.

ஆனால், இன்று ஆட்சியாளர்களும் மாறிவிட்டார்கள். அரசியற் சூழ்நிலையும் மாறிவிட்டது. அவர்கள் கொள்கையும் மாறிவிட்டது. தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, முன்னைய ஜனாதிபதிகள் போன்று அமைச்சர் தொண்டமானை முதன்மைப்படுத்தவும் இல்லை. முக்கியத்துவம் கொடுக்கவும் இல்லை அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என அவர் கருதவுமில்லை. மலையக மக்களின் ஆதரவைப் பற்றி அவர் சிந்திப்பதாகவும் இல்லை.

இந்நிலையில் தான் தற்பொழுது அரசாங்கத்தின் போக்கில் அமைச்சர் தொண்டமான் அதிருப்தி கொண்டிருக்கிறார். முன்னைய ஆட்சித் தலைவர்களும் மலையக மக்களுக்கு எதிராகவே தொழிற்பட்டார்கள். ஆயினும், அதை அமைச்சர் தொண்டமான் கண்டுகொள்ளா அளவிற்கு ஆட்சியாளர்களால் கவனிக்கப்பட்டார். ஆனால், தற்பொழுது டி. பி. விஜேதுங்கா அவ்வாறு நடந்துகொள்ளத் தயாராகவில்லை.

இந்நிலையில் தான் தற்பொழுது தோட்டங்களை நீண்ட காலக் குத்தகைக்கு - 30 வருடங்கள் - தனியார் கொம்பனிகளிடம் விடுவது தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. இதில், தனியார் கொம்பனிகள் வைத்துள்ள நிபந்தனைகள் தனியாக நீண்டகால குத்தகை என்பது மட்டுமல்ல, வேறும் சில நிபந்தனைகளும் உள்ளன. இதில், தோட்டங்களில் இயங்கும் அரசியல் அமைப்புக்கள் கலைக்கப்பட வேண்டும். அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாது. தோட்டத் தொழிலாளரின் லீவுகள் கணிசமாகக் குறைக்கப்படவேண்டும் என்பவை முக்கியமானவையாகும்.

தனியார் கொம்பனிகளின் இக் கோரிக்கைகள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இ.தொ.கா. தனது அரசியல் அடித்தளத்தையே இழந்து விடும். என்பதில் சந்தேகமில்லை தோட்டங்களுக்குள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்பது ஒரு வகையில் இ. தொ. கா விற்கு மலையகத்தில் தடைவிதிப்பதற்கு ஒப்பானதே ஆகும்.

ஆகையினால், இவ் விவகாரத்தில் ஐ, தே. க, அரசாங்கத்துடன் இ.தொ.கா வினால் சமரசம் செய்து கொள்வதில் பெரும் நெருக்கடி உண்டு. அவ்வாறு சாத்தியப்படக் கூடுமானால் அது தோட்டங்களில் இருந்து தனியார் கொம்பனிகளை வெளியேற்றுவதாகவே முடியும். இது எத்துணை சாத்தியமாகும்? ஆனால், அமைச்சர் தொண்டமானை புறந்தள்ளிவிட்டு ஐ.தே.க. வால் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க முடியுமா? என்பதும் எதிர் காலத் தேர்தல்களை எதிர் கொள்ள முடியுமா? அதில் வெற்றியீட்ட முடியுமா? என்பதும் கேள்விக்குரியவையே. இந்நிலையானது பௌத்த பேரினவாதத் தலைமையா? அன்றி ஆட்சி அதிகாரமா என்ற இருதலைக் கொள்ளி எறும்பு நிலையை ஐ. தே. கவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

---

ரத்தினம் (22), ராஜபத்மன் (35), பத்மநாதன் (37) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலையிலிருந்து வவுனியாவிற்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் கடுகஸ்தி கிலியாவில் வைத்து இரு தமிழ்ப் பெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தனியார் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் வேறு இரு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்

இளைஞர்கள் தெரிவித்துள்ள போதிலும். இந்த இளைஞர்கள் அனைவரும் மட்டக்களபைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

## புதிய வகுப்புகள் ஜனவரி 5இல்

1994ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் யாவும் 94ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படக் கூடாது என்பதை யாழ். மாவட்ட தனியார் கல்வி நிர்வாகப் பிரிவுச் செயலம் அறிவித்துள்ளது. மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

---

### பாடசாலை

பாய்கள் பலர் செத்து விழுந்து கொண்டிருந்தார்கள். எமக்கு என்னசெய்வதுஎன்று புரியவில்லை

உடனே கடற்கரைப் பக்கமாக பாய்ந்தோடினோம். அப்போது புலிகள் எம்மை மறித்துச் சுட்டார்கள் நாம் தப்பியோடினோம்

சிறிது தூரத்திலிருந்து பார்த்தோம் புலிகள் பச்சைநிற டோர்ச் வெளிச்சத்தில் வீழ்ந்த சிப்பாய்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். இராணுவத்தினர் கூக்குரலிடுவது எமக்குக் கேட்டது.

பொழுது விடியும் நேரம் எங்கள் பக்கம் ஒரு வெளிச்சம் விழுந்தது எமது பக்கம் நோக்கி புலிகள் சுட்டார்கள் அப்போது நாம் எட்டுப்பேர் எம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேறுதிசைநோக்கி கரையேறினோம்.

பூநகரி பிரதான முகாமிற்கு எம்மால் செல்ல முடியவில்லை. எல்லாப் பக்கங்களிலும் தாக்குதல் இடம்பெற்றதால் இது சாத்தியமாகவில்லை. அதனால் ஏரியை நோக்கிச் சென்றோம்.

வழியில் பெண் புலிகள் 50 பேர்வரை இருந்தார்கள். அதனால் நாம் பற்றைக்குள் ஒழிந்துவிட்டோம்.

சிறிதுநேரத்தில்புலிகள் எமது ஆயுதங்களை டிராக்டர்களில் ஏற்றிக்கொண்டு செல்வதைக் கண்டோம்.

அங்கிருந்து சென்று காட்டிலேயே இராப்பொழுதைக் கழித்தோம். எமக்கு பிரதான முகாமிலிருந்து மோட்டார் சத்தம், பீரங்கிச் சத்தம் கேட்டவண்ணம் இருந்தன.

மூன்று நாட்கள் எமக்கு உணவு கிடைக்கவில்லை. காட்டில் இலை, குழைகள், தேங்காய், வேறு பழங்கள் போன்றவற்றையே உண்டோம்.

புலிகளின் படகு ஒன்றைக் கைப்பற்றும் நோக்கில் படகு எங்கே உள்ளது என்பதை அவதானிக்கும் நோக்கில் மரங்களில் ஏறினோம். ஆனால் அதுவும் பயனளிக்கவில்லையென அவர் தெரிவித்தார். பின்னர் இராணுவத்தினர் முகாம்பகுதிக்கு வந்த பின்னர் அவர்களுடன்சேர்ந்து கொண்டோம் என்றார்.

---

### இன்று

இது நான்கு கோடியைத் தாண்டலாம் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஆசியாவில் இந்தியா, தாய்லாந்து, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் வேகமாகப்பரவும் சூழ்நிலைகள் உள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது. 1995க்குப் பின் இலங்கையில் வயது வந்தவர்களின் மரணத்திற்கு ஒருமுக்கியகாரணமாக அமையும் எனவும் தற்சமயம் உள்ள புள்ளிவிபரப்படி 3000 பேருக்குஇலங்கையில்எயிட்ஸ் தொற்றி இருக்கலாம்எனவும் அதில் 108 பேர் நோயாளராக இனம்காணப்பட்டுள்ளனர் என்றும். அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### கறுப்பு

சுமார் அரைமணி நேரம் அப்பகுதியை வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்த உலங்குவானூர்தி அப்பால் சென்றதும் பற்றையை விட்டு வெளியில்வந்து ''பார்த்தீபன் பார்த்தீபன்'' என்று கூப்பிட்டேன்.

ஒரு பதிலும் கிடைக்கவில்லை. நாம் எடுத்து வந்த வள்ளம் கடலில் அடைந்து கொண்டிருந்தது. அடுத்து கடல் நீர் ரத்தச்சிவப்பாக எழுந்ததைப் பார்த்தேன்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் பூநகரி-கல்முனைப் பகுதியில் உலங்கு வானூர்தித் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியான குருநகரைச் சேர்ந்த பார்த்தீபனுடன் கூடச்சென்றிருந்த மற்றொரு இளம் மீனவரான சின்னராசாஅன்ரனி(கிளியன் வயது 22) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

''இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்த பார்த்தீபனை கரைக்கு எடுத்து வந்தேன். அடைந்த வள்ளத்தையும் நங்கூரம் போட்டு விட்டு தகவலை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டேன்'' இவ்வாறு அவர் தெரிவித்தார். (21)

---

# ... உசார் நிலையில் இருக்க உத்தரவு

(கொழும்பு)

கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. புலிகள் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவு எச்சரித்ததையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து கிழக்கிலுள்ள படைமுகாம்கள் 24 மணிநேரமும் உசார் நிலையில் இருக்குமாறும் குறிப்பாக எல்லைக் கிராமங்களில் உள்ள முகாம்கள் பூரண பாதுகாப்புடன் இருக்குமாறும் பாதுகாப்பு அமைச்சு கிழக்கு பிராந்திய இராணுவ தளபதிக்கு அறிவுறுத்தியுள்ளது.

## ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை உண்டு

### மொலாயன் சிங் யாதவ்

(டில்லி)

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சிக் கூட்டணிக்கு சுயேட்சை உறுப்பினர்களும் தமது கூட்டணியுடன் ஒத்த போக்குடைய கட்சிகளும் ஆதரவளிக்கும் என்று மொலாயன் சிங் யாதவ் தெரிவித்துள்ளார்.

நானூற்றி இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்ட உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலில் தனது கூட்டணிக்கு பெரும்பான்மை பலம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

## மாகாணசபை வேட்பாளரா? வேண்டவே வேண்டாம்!

### கிழக்கு பிரமுகர்கள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ளூர் பிரமுகர்கள் அரசியல் கட்சிகளின் தொல்லை பொறுக்காமல் கொழும்பு நோக்கிச் செல்கின்றனர்.

உத்தேச மாகாணசபைத் தேர்தலில் தங்கள் பெயரைத் தான் வேட்பாளர் பட்டியலில் போட்டுள்ளோம் என்று அரசியல் கட்சிகளும் குழுக்களும் பிரமுகர்களை வேட்பாளர்களாக இணங்கவைக்க முயற்சி செய்கின்றனராம்.

மிகவும் பவ்வியமாக இந்த ஒப்புதல் கேட்கப்படுகிறதாம். 'தம்பீ...என்னைவிட்டுவிடு நிம்மதியாக நடமாடவேண்டும்' என்று கூறி இவர்கள் நாகுக்காக மறுத்துவிடுகின்றனராம்.

வேட்பாளர் வேட்டையில் ஈடுபடுபவர்களின் தொல்லை பொறுக்கமுடியாமல் கொழும்பு நோக்கிச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதாம்.

கொழும்பில் பொலிஸ் பிடித்தாலும் பரவாயில்லை தேர்தல் தொல்லை வேண்டாம் என்று இவர்கள் நழுவிவிடுகின்றனர்.

---

### பஸ்வண்டி

படுகாயமடைந்த இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதல் குறித்து மினிபஸ்ஸின் சாரதியான ஜெயராசா என்பவர் நமது நிருபரிடம் விபரிக்கையில் ''நீர்வேலி பகுதியில் நாம் வந்து கொண்டிருந்த போது திடீரென வந்த உலங்கு வானூர்தி பஸ்ஸை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. நான் தொடர்ந்து வேகமாக செலுத்திக் கொண்டிருந்தேன். அப்போது என்முதுகை துப்பாக்கிச் சன்னம் துளைத்துச் சென்றது.

முதுகிலிருந்து இரத்தம் பாய்ந்து கொண்டிருந்த போதும்பயணிகளை தாக்குதலிலிருந்து காப்பாற்றும் நோக்குடன் வேகமாக செலுத்தினேன். அப்போது ரயரில் சூடு பிடித்தது. இதனால் தொடர்ந்து ஓடமுடியாத நிலையில் பஸ்ஸை நிறுத்திவிட்டு எல்லோருமாகஇறங்கி ஓடி பாதுகாப்பு தேடினர். அவ்வேளை சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன்றொக்கற்தாக்குதலும் நடாத்தப்பட்டது. சுமார் பத்து நிமிடங்கள் வரை நடந்த இத்தாக்குதலினால் பஸ் பலத்த சேதமடைந்தது'' என்றார். (ச, சி)

---

## மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் முன்னணியில்

(டில்லி)

மத்தியப் பிரதேச சட்டசபைத் தேர்தலில் இதுவரை வெளிவந்த முடிவின்படி இந்திரா காங்கிரஸ் கட்சி முன்னணியில் உள்ளது.

320 மொத்தத் தொகுதிகளில் தேர்தல் நடத்த 316 தொகுதிகளில் 18 தொகுதிகளுக்கான முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்திரா காங்கிரஸ் 14 தொகுதிகளிலும், பாரதீய ஜனதாக் கட்சி மூன்று தொகுதிகளிலும், ஜனதா தளம் ஒரு தொகுதியிலும் வெற்றியீட்டியுள்ளன.

மேலும் வாக்குகள் எண்ணப்படும் 272 தொகுதிகளில் 129 தொகுதிகளில் காங்கிரஸ் முன்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்தபடியாக பாரதீய ஜனதா 83 தொகுதிகளிலும், சுயேட்சை மற்றும் இடதுசாரிகள் 10 தொகுதிகளிலும், சமாஜவாதிஜனதா-பகுஜன் சமாஜ் முன்னணி ஆறுதொகுதிகளிலும், ஜனதா தளம் நான்கு தொகுதிகளிலும் முன்னணியில் உள்ளதாக நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### வடகிழக்கு

லாளராகவும், பல அமைச்சுக்களின் செயலாளராகவும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவராகவும், அரசாங்க வடிசாலைகள் கூட்டுத்தாபன தலைவராகவும், கப்பல் கூட்டுத்தாபன தலைவராகவும் செயலாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### லயனல்

பெற்றுக்கொண்ட சிங்கள அதிகாரி இவர் எனவும், இவரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவே அரசாங்கம் வடக்கு - கிழக்கு ஆளுனராக இவரை நியமித்துள்ளது எனவும் அவர் மேலும் 'சந்தேசிய' வானொலிக்குத் தெரிவித்தார்.

---

### ஹெலி

துள்ளார்.

நேற்று இரவு 9. 30 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது எஸ். சிவயோகன் (வயது 22) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

---

### இரு

கைதுசெய்து முகாம்கொண்டு சென்றனர்.

தும்பாலையைச் சேர்ந்த 11 பிள்ளைகளின் தந்தையாராகிய பெரியதம்பி சிவசம்பு (65), காந்தி நகரைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையாகிய நல்லதம்பி மகாராஜன் (25) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

## கணித பாட செயலமர்வு

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான நிலையத்தினால் நடாத்தப்படும் ஆண்டு 11 கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான விசேட செயலமர்வு இன்று பி. ப. 3 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட மாணவர்களை சமுகமளிக்குமாறு கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் பொறுப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பூநகரியில் பலியான படையினருக்கு நாலரை கோடி ரூபா நட்டஈடு

(கொழும்பு)

பூநகரித்தாக்குதலின்போது கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சுமார் நாலரைக் கோடி ரூபாவை வழங்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இத்தாக்குதலின்போது காயப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு மேற்படி தொகைப் பணம் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உலகிலேயே இலங்கையில் மட்டுமே இராணுவத்தினருக்கும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.


## பல்பொருள் வாணிபம்!

எல்லோருக்கும் ஓர் நற்செய்தி!!

இன்று (1-12-93) காலை 8 மணிக்கு

மங்களகரமான திறப்புவிழா

### சேரன்பல்பொருள்வாணிபம்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

(சி-8030)


## மட்டு-அம்பாறை பகுதிகளில் பொது மக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் அதிரடிப் படையினர் பொதுமக்களை கைது செய்யும் நடவடிக்கை தீவிரமடைந்துவருகிறது. கடந்த 24ஆம் திகதி அதிகாலை வெல்லாவெளியில் காட்டு கம்புகள் எடுத்துச்சென்ற மூன்று தமிழர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைதாகினர். சுப்பையா ஆறுமுகம் (25) சரவணையடி ஊற்று. வேலாச்சி கந்தசாமி (23), விக்கிரமசிங்கராசா (21) ஆகியோரே இவ்வாறு கைதானவராவர்.

கடந்த 27ஆம் திகதி சமுனியடிவெட்டையை 13ஆம் கிராம அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து துப்பாக்கி சூடு நடாத்தினர். காலை 5 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் மூன்று தமிழர் அதிரடிப் படையால் கைதாகினர். ஜீவா (சமுனியடிவெட்டை), சுப்பிரமணியம், வசந்தி ஆகியோரே படையினரால் கைதுசெய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி விளையாடும். இப்போட்டி இன்று பல்கலைக் கழக மைதானத்தில் பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவுள்ளது.

## அனுமதியின் பின்னர் மீனவர் நிவாரணம்

யாழ். குடா நாட்டில் சிறிலங்கா அரசின் கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் அனுமதி கிடைத்தவுடன் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

மேற்படி நிவாரணம்வழங்க அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும் எம் மாதத்தில் இருந்து அதனை அமுல்படுத்துவது தொடர்பாக இன்னும் தமக்கு அறிவிக்கப்படவில்லை என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அனேகமாக இம்மாதத்தில் இருந்து இவ் உலர் உணவு விநியோகம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி கடல் வலயச் சட்டத்தினால் சுமார் 10000 மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி தெரிவித்துள்ளது. (பா)

## பரீட்சை நிலையம் மாற்றம்

கொக்குவில் இராமகிருஷ்ண மகளிர் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்காக இன்று புதன் கிழமை நடக்க இருந்த பரீட்சை கொச்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

## வழுக்கையாறு பெருக்கெடுக்கிறது

யாழ் மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் பெருமழையை அடுத்து வழுக்கை ஆறு பெருக்கெடுத்து பாய்கிறது.

வயல்க் காணிகளிலும், குடிமனைப் பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதிகளவு நீர் தேங்கியதை அடுத்து வெள்ளம் பல பாதைகளாலும் வெட்டி ஓட்டப்படுவதால் வழுக்கை ஆறு பெருக்கெடுத்துள்ளது. (41)

## நீங்கா நினைவுகள்

தாயின் மடியில்: 21 . 07 . 1961



தாயக மீட்பில்: 01 . 12 . 1992

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 29- 11- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-8125, 26-5870, 28-0523, 40-1688, 28-1706, 26-2366, 24-3262, 24-9830, 28-8444, 24-9689, 24-9856, 28 6853, 43-5726, 24-3063, 27-4162.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

41-8155, 40-1516, 43-4045, 42-2317, 26-9145, 41-9663, 43-4170.

### 30- 11- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:


42-0728, 26-3937, 40-2829, 26.2573, 42-3945, 24-6339, 42-3815, 27-4289, 27-5217, 41-9989, 24-4153, 28-0882.

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து செல்லத்துரை

(முன்னாள் ஊழியர், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்)

அளவெட்டியை வாழ்விடமாகவும், நல்லூரைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து இளையபிள்ளை தம்பதிகளின் மகன் செல்லத்துரை 30-11-93 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற இராசம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, அருந்தவநாதன் (அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்), பாலகௌரி (ஜேர்மனி), பாலயோகினி (அவுஸ்திரேலியா), பாலவிஜிதா (மூன்றாம் ஆண்டு மாணவி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், தவபாலசிங்கம், நாகேந்திராதேவி, ஜீவராசா (ஜேர்மனி), பாலச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், வாசுகி, பிரகாசன், சாழினி, பிரசாத், கேதாரணி, நிருஷன் (ஜேர்மனி), ரினா, அனோ, அனிற்றா, பிரஜீவ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராசமணி (மலேசியா), காலஞ்சென்ற இராசம்மா, பொன்னம்மா, கண்ணம்மா, காலஞ்சென்ற கனகம்மா, வயிரவநாதன் (நீர்கொழும்பு), அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை (மலேசியா), கந்தையா, கனகரத்தினம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நவரத்தினம், திருப்பதி (ஆசிரியை, நீர்கொழும்பு), தங்கராசா ஆகியோரின் மைத்துனரும், பாலசுப்பிரமணியத்தின் சகலனும், கோசலா தேவியின் மைத்துனரும், சுபாஜினி, ஐங்கரன் (ஜேர்மனி) மயூரதன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

| தாயின் மடியில்: | | தாயக மீட்பில்: |
|---|---|---|
| 21 . 07 . 1961 |  | 01 . 12 . 1992 |

# மேஜர் அபயன் (கிருஸ்ணபிள்ளை சிவகுமார்)

தெல்லிப்பளை யாழ்ப்பாணம்

யாழ் நாடு
இவன் பிறந்ததால்
பெருமை பெற்றது
தேன் நாடு
இவனைப் பெற்றதால்
பெரும் பயன் கொண்டது
அபயன்.....

இங்கு
அனேக உயிர்களுக்கு
அபயமளித்தவன்
இவனால்
குணப்படுத்தப்பட்டவை
விழுப்புண்கள் மட்டுமல்ல
இதயத்து ரணங்களுந்தான்

அன்று
பாசறைப் பயிற்சி
முடியாது என்று
முடங்கும் நிலையிருந்தும்
முடியுமென
முத்திரை பதித்தவன் அவை
பாசறைகள் மட்டுமல்ல
பல்கலைக் கழகமுந்தான்

இங்கு
பிரதான வீதிகளே
பலருக்குப்பிடிபடா நிலையிருந்தும்
பாதையே இல்லா
இடங்களுக்கும் இவன்
பழக்கப்பட்டவன்
பழக்கமானது
இந்த மண் மட்டுமல்ல
மக்களுந்தான்

இங்கு
மண் சிவந்த களங்கள்
பல கண்டவன்
கற்றும் கொடுத்தவன்
இவன் கற்பித்தது
போர்முறை மட்டுமல்ல
பொறுமையுந்தான்

இந்த
விடியலின் பாதையில்
பத்து ஆண்டுகள் இவன்
பயணம் செய்தவன்
இதில் ஆண்டுகள்
ஆறு இங்கு உழைத்தவன்
உழைத்தவன் மட்டுமல்ல
தன்னை விதைத்தவனும் கூட

அன்று
இந்த மண்
இவனை
நேசித்தது
இன்றோ
பூசிக்கின்றது
இவன் விதைக்கப்பட்டது
இம் மண்ணில் மட்டுமல்ல
எம் மனங்களிலும் கூட

மேஜர் அபயனுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2-ம்லெப். நவாஸ் /மதிமுகன் (இளையதம்பி அரியநாயகம் பெரிய புல்லுமலை மட்டக்களப்பு) இவருக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நண்பர்கள், பொதுமக்கள்.
மட்டக்களப்பு - அம்பாறைப்பிராந்தியம்

(6726)

## 29- 11- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-8125, 26-5870, 28-0523, 40-1688, 28-1706, 26-2366, 24-3262, 24-9830, 28-8444, 24-9689, 24-9856, 28 6853, 43-5726, 24-3063, 27-4162.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகனஇலக்கங்கள்:

41-8155, 40-1516, 43-4045, 42-2317, 26-9145, 41-9663, 43-4170.

## 30- 11- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-0728, 26-3937, 40-2829, 26.2573, 42-3945, 24-6339, 42-3815, 27-4289, 27-5217, 41-9989, 24-4153, 28-0882.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-8497, 41-6686, 26-9283, 27-7281, 26-0423, 26-1741, 28-0854, 26-7227, 41-5605, 26-4393, 24-8353.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ்நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

**"BIG BOSS"**

(சிறந்த கராட்டிப் படம்)

தினசரி பி.ப. 4.00 மணி, மாலை 6.00 மணி

சனி,ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30, 4.00 மாலை 6.00 மணி

(சி-7852)


முல்லைத்தீவில் 1993-11-25 அன்று அமரத்துவம் எய்திய

## உயர்திரு ப. திருநாவுக்கரசு

அவர்களுக்கு

## எமது கண்ணீரஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

வட பிராந்திய பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதிக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி சபாரத்தினம் அவர்களின் தந்தையாரின் மறைவை யிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலதிக கூட்டுறவு உதவி ஆணையாளரும்(ப. தெ.) கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களும், 'தலைமை எழுதுநரும் அலுவலக ஏனைய அலுவலர்களும்.

கூட்டுறவு அலுவலகம்,
ப தெ. வ. அ. பிரிவு,
572, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(6739)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


இராசம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, அருந்தவநாதன் (அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்), பாலகௌரி (ஜேர்மனி), பாலயோகினி (அவுஸ்திரேலியா), பாலவிஜிதா (மூன்றாம் ஆண்டு மாணவி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், தவபாலசிங்கம், நாகேந்திராதேவி, ஜீவராசா (ஜேர்மனி), பாலச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், வாசுகி, பிரகாசன், சாழினி, பிரசாத், கேதாரணி, நிருஷன் (ஜேர்மனி), ரினா, அனோ, அனிற்றா, பிரஜீவ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராசமணி (மலேசியா), காலஞ்சென்ற இராசம்மா, பொன்னம்மா, கண்ணம்மா, காலஞ்சென்ற கனகம்மா, வயிரவநாதன் (நீர்கொழும்பு), அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை (மலேசியா), கந்தையா, கனகரத்தினம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நவரத்தினம், திருப்பதி (ஆசிரியை, நீர்கொழும்பு), தங்கராசா ஆகியோரின் மைத்துனரும், பாலசுப்பிரமணியத்தின் சகலனும், கோசலா தேவியின் மைத்துனரும், சுபாஜினி, ஐங்கரன் (ஜேர்மனி) மயூரதன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல: 12, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தில் 1-12-1993 இன்று புதன்கிழமை இடம்பெற்று தகனக்கிரியைக்காக நல்லூர் செம்மணிமயானத்துக்கு காலை 11. 00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. அருந்தவநாதன்
(மகன்)

(6738)

## திருமதி சிவகாமிஅம்மை சதாசிவம்

மீசாலையைச் சேர்ந்த காலம் சென்ற விதானையார் திரு. கனகசபை சதாசிவத்தின் அன்பு மனைவி திருமதி சிவகாமி அம்மை சதாசிவம் 30 - 11 - 93 - ல் காலமானார். அன்னார் திருமதி சிவலோகநாயகி விவேகானந்தன் (பண்டாரவளை), திருமதி பத்மாவதி ஏரம்பு, திருமதி நவநீதவல்லி சிவபாதசுந்தரம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திரு. சதாசிவம் சிவானந்தம் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஓய்வு பெற்ற DR விவேகானந்தன், திரு. ஏரம்பு(ஓய்வு பெற்ற நில அளவையாளர்), திரு. சிவபாதசுந்தரம் (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற சிவானந்தம் சந்தானமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான S. K. செல்லத்துரை, S K குமாரசாமி, S.K காசிநாதன், S.K. குலசேகரம் (D.O.A. நீர்ப்பாசன இலாகா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விவேகானந்தன் சிவசுதன், உமாசுதன் (கணக்காய்வாளர் கொழும்பு), ஏரம்பு இராகுலன், குருகுலன், அமுதா, குமுதா, சிவபாதசுந்தரம் கயல்விழி (யாழ் பல்கலைக்கழகம்), பிரணவன், மலர்விழி (வேம்படி மகளிர் கல்லூரி) சிவானந்தம் செந்தூரன், மயூரன், றமணன், லக்ஷியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷிகேதகியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30.11.93 வேம்பிராய் குடும்ப மயானத்தில் நடைபெற்றது.

தகவல்:
ச. சிவானந்தம்
(மகன்)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(6736)